**O.S.No.69/2018**

**வா.சா.1, திரு.ஐயாக்கண்ணு**
நாள் :16.04.2024 நேரம் : 02.40 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1) நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இடப்பிரச்சனைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்களில் என்ன உள்ளது என்றால் காட்டுகருவேல மரங்கள் உள்ளது. வழக்கு பிராது சொத்தில் காட்டுகருவேல மரங்கள் உள்ளது என்ற விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.62/7A நஞ்சை நிலமாகும். சர்வே எண்.65/7G புஞ்சை நிலமாகும். வழக்கு சொத்து பிராது சொத்து விபரத்தில் சொத்தின் வகைப்பாடு பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) தாவா 1வது இலக்க சொத்திற்கு கிழக்கு பகுதியில் இருளாண்டி தேவர் இருக்கிறாரா என்றாரா இல்லை, எங்களுக்குத்தான் உள்ளது. மேற்குபக்கம் காளிமுத்துவின் நஞ்சை உள்ளது என்றால் சரிதான். காளிமுத்து எனது தாயார் ஆவார். மேலே சொன்னவாறு மேற்குபக்கம் காளிமுத்து நஞ்சை என்று குறிப்பிடாமல் வாதி நஞ்சை என்று ஏன் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது அம்மா சொத்து எங்களுக்குத்தான் என்பதன் அடிப்படையில் அவ்வாறு போடப்பட்டது. காளிமுத்து நஞ்சை என்பதை எனது தாயாரை குறிக்காது என்று சொன்னால் சரியல்ல.

3) தாவா 2வது இலக்க சொத்தில் வடக்கு திசையில் ராமுத்தேவர் புஞ்சை உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது சொத்து விபரத்தில் வடக்கு பக்கம் வாதி நஞ்சை என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 2வது இலக்க சொத்து புஞ்சை நிலம் என்றால் சரிதான். அதை சுற்றியும் புஞ்சை நிலம் தான் உள்ளது என்றாலும் சரிதான். பிராது சொத்து விபரத்தில் நான்கு மால்களில் சுற்றிலும் நஞ்சை உள்ளதாக தவறாக

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொத்து விபரத்தில் நான்கு மால்கள் தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) இதற்கு முன் முந்தைய வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கை எனது அம்மா தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் சர்வே எண்.65/7G விஸ்தீரணம் 0.09.5 ஏர்ஸ் என்று காணப்படுகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சர்வே எண்.65/7G விஸ்தீரணம் 0.06.0 ஏர்ஸ் என்று காணப்படுகிறது என்றால் நான் சரியான அளவில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2வது இலக்க சொத்தை பொறுத்து முந்தைய வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் முரண்பாடாக விஸ்தீரணம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

5) வழக்கு சொத்து இதற்கு முன்பாக இருளப்பதேவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். இருளப்பதேவருக்கு எவ்வாறு பாத்தியம் என்று பிராதில் கூறவில்லை என்றால் சரிதான் ஆனால் அவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. இருளப்பதேவருக்கு பாத்தியம் என்பதை காட்டக்கூடிய ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, இருளப்பதேவருக்கு பின்பு ராமுத்தேவருக்கும் அதற்கு பின்பு காளிமுத்து அம்மாளுக்கும் சொத்து மாற்றப்பட்டது. இருளப்பதேவருக்கு சொத்து பாத்தியம் இல்லாமல் காளிமுத்து அம்மாள் பெயருக்கு சொத்து தவறுதலாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) இருளப்பதேவர் பெயரில் எந்த வகையான ஆவணம் ஏற்பட்டது என்றால் இருளப்பதேவருக்கு பாகம் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து ஆகும். பாகம் ஏற்பட்டது ஏதேனும் ஆவணம் வைத்துள்ளீர்களா என்றால் ஊரில் உள்ள பெரியோர்கள் முன்னிலையில் பாகம் ஏற்பட்டது. பாகம் எழுதப்பட்ட ஆவணமா என்றால் இல்லை வாய்மொழி ஆவணம் தான். நான் சொன்ன பாகப்பிரிவினை எந்த தேதியில் எங்கு வைத்து யார் முன்னிலையில் எத்தனை சொத்துக்களுக்கு பாகம் நடந்தது என்றும், யார் யாருக்கு எந்தெந்த பாகங்கள் ஒதுக்கப்பட்டது என்று என்னால் கூறமுடியுமா என்றால் கூறமுடியாது நான் அந்த சமயம்

பிறக்கவில்லை. நான் சொன்னதுபோல் எந்தவிதமான பாகமும் நடக்காததால் தான் என்னால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை என்றால் சரியல்ல.

7) தாவா சொத்துகளுக்கு எங்கள் முன்னோர்கள் பெயரில் SLR ஆவணத்தில் எங்களது முன்னோர்கள் பெயர் காணப்படுகிறதா என்றால் எனது அத்தை மீனாட்சி பெயரில் உள்ளது. மீனாட்சி என்பவர் எனது அத்தை இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மீனாட்சியின் கணவர் பெயர் கண்ணுச்சாமி தேவர் என்றால் சரிதான். சிலையக்காளின் மகளின் மகள் தான் மீனாட்சி என்ற மீனாள் என்றால் எனது அத்தையின் முன்னோர்கள் பெயர் பற்றி எனக்கு தெரியாது, அத்தையின் கணவர் பெயர் மட்டும் தான் தெரியும். மீனாட்சி எனது அத்தை தான் என்பதை நிரூபிக்க தயாரா உள்ளேனா என்றால் உள்ளேன். மீனாட்சி என்பவர் பிரதிவாதிகளின் முன்னோர் என்றால் சரியல்ல. இருளப்பதேவருக்கு எத்தனை மக்கள் என்றால் 1.ராமுத்தேவர், 2.இருளாயி மற்றும் 3.மீனாள் ஆவார்கள். ராமுத்தேவருக்கு உடன்பிறந்தவர் மீனாள் கிடையாது என்றால் சரியல்ல. ராமுத்தேவருக்கு எத்தனை மக்கள் என்றால் 1.இருளாண்டி, 2.ஜெயக்குமார், 3.பாப்பா, 4.நாகவள்ளி மற்றும் 5.ஐயாக்கண்ணு ஆவோம்.

8) மேற்சொன்ன இருளாண்டியும், ஜெயக்குமாரும் தற்போது உயிருடன் இல்லை. என் உடன்பிறந்தவர்களும் அவர்களது வாரிசுகளும் சொத்தில் பாத்தியம் கொண்டாடவில்லை என்றால் அவர் அவர்களுக்கு பாகம் பிரித்துகொண்டோம், எனக்கு தாவா சொத்தை ஒப்படைத்துள்ளார்கள். இந்த சொத்தில் எங்களுக்கு பாத்தியமே இல்லாததால் தான் எனது உடன்பிறந்தவர் சொத்தில் பாத்தியம் கொண்டாடி வழக்காட வரவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது உடன்பிறந்தவர்களும் எந்த தேதியில் எங்கு வைத்து யார் முன்னிலையில் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் நாங்கள் யார் முன்னிலையிலும் பாகம்பிரித்துக்கொள்ளவில்லை நாங்கள் உழுதஇடத்தில் நாங்கள் எங்களுக்குள்ளேயே பாகம்பிரித்துக்கொண்டோம். எங்களுக்குள் பாகம் ஏற்பட்ட விபரத்தை நிரூபிப்பதற்கு எனது உடன்பிறந்தவர்களை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். நான் சொல்வதுபோல் எங்களுக்குள் எந்தவொரு

பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றும் தாவா சொத்து எனக்கு பாகமாக கிடைக்கவில்லை என்றால் சரியல்ல.

9) எனது உடன்பிறந்த மற்றவர்களுக்கு எந்தெந்த சொத்துக்கள் பாகமாக கிடைக்கப்பெற்றது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் கூறமுடியாது. முந்தைய வழக்கிற்கு பின்னால் பிரதிவாதிகள் தாவா சொத்தை விட்டுக்கொடுத்து எனது அனுபவத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் பெயர் என்னவென்றால் காளிமுத்து ஆகும். UDR ல் காளிமுத்து அம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டதா என்றால் சரிதான், அதற்கு முன்பாக எனது அம்மா பெயரிலும், எனது அப்பா பெயரிலும் பட்டா உள்ளது. மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10) UDR காலத்திற்கு முன்பாக எனது அப்பா, அம்மா மற்றும் எனது முன்னோர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எனது தாயாருக்கு பாத்தியம் என்று சொல்லி எனது தாயார் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.122/2004 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.5 ஆவணத்தில் 2 ம் பிரதிவாதி சிலையக்காள் தான் இவ்வழக்கின் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.122/2004 தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான், எனது தாயார் கண்பார்வை குறைபாடுனால் வரமுடியாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

11) அசல் வழக்கு எண்.122/2004 தாக்கல் செய்வதற்கு முன்னமையே எனது சகோதர, சகோதரிகளுக்கு இடையே பாகம்பிரித்துக்கொள்ளப்பட்டதா அல்லது அதற்கு பின்னால் பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டதா என்றால் அசல் வழக்கு எண்.122/2004 தாக்கல் செய்வதற்கு முன்னமையே பாகம் பிரித்துக்கொண்டோம். அசல் வழக்கு எண்.122/2004 ல் எனது தாயாரும், அவரது மக்களும் ஒன்றாக அனுபவம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.122/2004 ல் எதிரிடை

அனுபவ பாத்தியம் மூலமாக அனுபவம் செய்து வருவதாக பிராதில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முந்தைய வழக்கில் சொல்லப்பட்டுள்ள பாத்திய அனுபவ விபரமும், இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள பாத்திய அனுபவ விபரமும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு முரண்தடை சட்டகோட்பாடால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

12) அசல் வழக்கு எண்.122/2004 யை மேல்நடத்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் அதற்காகத்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.1 மற்றும் வாசாஆ.2 கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் காட்டுகருவேல மரங்களை மறைத்து நெல் இருப்பதாக வாசாஆ.3 ஆவணத்தை கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வாசாஆ.1 ஆவணத்தில் ராமுத்தேவர் மகன் காளிமுத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராமுத்தேவர் மகன் காளிமுத்து என்று யாரும் கிடையாது என்றால் சரிதான். வாசாஆ.1 முதல் வாசாஆ.3 ஆவணங்கள் முறையான விசாரணையின்றி தவறாக வழங்கப்பட்ட பட்டா என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 03.45 P.M

சாட்சியின் கையொப்பம்.